Puducherry/Reg.Bulletin.Tamil/18.10 hrs/21.10.2025/Script/

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 21.10.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பாதுகாப்பு தளவாட ஏற்றுமதியில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக மாற்றுவதே தனது அரசின் இலக்கு என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

காவல் துறையினரின் உறுதியான அர்ப்பணிப்பு நாட்டையும், மக்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நடைபெற்ற காவலர் வீர வணக்க நாள் நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி காவலர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

வானிலை காரணமாக காரைக்கால் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் இன்று முதல் மறு அறிவிப்பு வரும் வரை மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் என அரசு அறிவுறுத்தி உள்ளது.

மோடி-பாதுகாப்பு

பாதுகாப்பு தளவாட ஏற்றுமதியில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக மாற்றுவதே தனது அரசின் இலக்கு என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். முப்படைகளுக்கும் தேவையான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு இந்தியா தனது திறன்களை வளர்த்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கோவா மற்றும் கார்வார் கடற்கரை பகுதியில் ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க் கப்பலில் இந்திய கடற்படை வீரர்களுடன் தீபாவளி பண்டிகையை பிரதமர் திரு நரேந்திர மோடி கொண்டாடினார். அப்போது அவர்களிடையே உரையாற்றிய அவர் பிரம்மோஸ் மற்றும் ஆகாஷ் எவுகணைகள் ஆபரேஷன் சிந்தூரின் போது தங்களது திறன்களை நிரூபித்துள்ளன என்றும் இதன் காரணமாக உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் இந்த ஏவுகணைகளை வாங்க தற்போது ஆர்வம் காட்டி வருவதாகவும் கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் பாதுகாப்பு தளவாடங்களின் ஏற்றுமதி 30 மடங்கிற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது என்றும், இந்த வெற்றிக்கு பாதுகாப்பு தொடர்பான ஸ்டார்ட்-அப் நிறுவனங்களும் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு தளவாடத் உற்பத்தி துறைகளின் முக்கிய பங்களிப்பே காரணம் என்றும் தெரிவித்தார்.

மோடி-காவலர் தினம்

நாட்டின் பாதுகாப்பிற்காகவும், மக்களின் நலனுக்காகவும் பணியாற்றி வரும் காவல் துறையினரின் அர்ப்பணிப்பு போற்றுதலுக்குரியது என்று குடியரசு துணைத் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இன்று காவலர் வீரவணக்க நாளை ஒட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், நெருக்கடி மற்றும் மனிதாபிமானத் தேவைகளின் போது அவர்களின் துணிச்சல், இரக்கம் மற்றும் தளராத கடமை உணர்வு வெளிப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இந்நாளை ஒட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில்

காவல் துறையினரின் உறுதியான அர்ப்பணிப்பு நாட்டையும், மக்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கிறது என்று தெரிவித்துள்ளார். காவலர் வீர வணக்க நாளை ஒட்டி, காவல்துறையினரின் வீரத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வணக்கம் செலுத்தி உள்ளார். காவல் துறையினரின் உயர்ந்த தியாகத்தை நினைவு கூர்ந்துள்ள அவர் நெருக்கடியான காலங்களிலும் தேவைப்படும் நேரங்களிலும் அவர்களின் துணிச்சலும் அர்ப்பணிப்பும் பாராட்டத்தக்கது என்று தெரிவித்துள்ளார். நாட்டை பாதுகாக்கும் பணியில் தீரத்துடன் பணியாற்றும் காவலர்களுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

குற்றங்களைத் தடுக்கவும் உள்நாட்டு பாதுகாப்பை உறுதி செய்யவும் காவலர்கள் அயராது பணியாற்றி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

காவலர் வீரவணக்க நாளை ஒட்டி, புதுடெல்லியில் உள்ள காவலர் நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்திய பின் உரையாற்றிய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் உறுதியான தேசத்திற்கு காவல்துறை வலிமையாக இருக்க வேண்டியது அவசியம் என்று தெரிவித்தார்.

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் நாட்டிற்காக தன்னலம் இன்றி சேவையாற்றும் காவலர்களுக்கு தலை வணங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

*ஜிஎஸ்டி-எழுது பொருள்*

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த மாதம் 22-ஆம் தேதி நடைமுறைப்படுத்தப்பட்ட ஜிஎஸ்டி பச்சத் உத்சவ் சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு,.............

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி-எழுது பொருள்*

(வாய்ஸ்)

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ் எழுது பொருட்களுக்கு அரசு குறிப்பிடத் தக்க நிவாரணத்தை அறிவித்துள்ளது. புதிய வரி சீர்திருத்தத்தின் ஒருபகுதியாக பென்சில், ஷார்ப்னர், கிரையான், பயிற்சி புத்தகங்கள், வரைபட புத்தகங்கள், வரைபடங்கள் மற்றும் விளக்கப் படங்கள் போன்றவற்றிற்கு முற்றிலும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருட்களுக்கு முன்பு ஜிஎஸ்டி 12 சதவிகிதமாக இருந்தது, தற்போது முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது. இதேபோல முன்பு 5 சதவிகித வரி விதிக்கப்பட்ட எரேசர் எனப்படும் அழிப்பான்களுக்கும் முற்றிலும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய எழுது பொருட்களை மிகவும் மலிவு விலையில் கிடைக்கச் செய்வதன் மூலம் மாணவர்களுக்கான கற்றல் செலவுகளை குறைப்பதுடன் உள்நாட்டு உற்பத்திக்கான தேவையையும் அதிகரிக்க முடிகிறது. எழுது பொருட்கள் மீதான ஜிஎஸ்டி வரிக்குறைப்பு என்பது குடும்பங்கள் மற்றும் மாணவர்கள் மீதான நிதிச் சுமையைக் குறைத்து நாடு முழுவதும் கல்வி கற்பதற்கான ஆர்வத்தை அதிகரிக்க வழி வகை செய்கிறது.

*ஜப்பான் பிரதமர்*

ஜப்பான் நாட்டின் முதல் பெண் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமதி சனாய் டக்காய்ச்சிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியா-ஜப்பான் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் இணைந்து பணியாற்ற

ஆர்வமுடன் இருப்பதாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். ஜப்பான் பிரதமராக திருமதி சனாய் டக்காய்ச்சி இன்று மாலை பதவி ஏற்கிறார். இவரது அமைச்சரவையில் வெளியுறவுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மொடேகி தோஷிமிட்ஸ்-க்கு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

*புதுச்சேரி-காவலர் வீர வணக்க நாள்*

புதுச்சேரியில் கோரிமேடு ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற காவலர் வீர வணக்க நாள் நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு காவலர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், காவல்துறை தலைவர் திருமதி ஷாலினி சிங் காவல் துறை துணைத் தலைவர் திரு சத்திய சுந்தரம் உள்ளிட்ட காவல் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு காவலர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். மேலும் இந்நிகழ்ச்சியில் பணியின் போது உயிர் நீத்த காவலர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக 3 சுற்றுகள் 21 துப்பாக்கி குண்டுகள் முழங்க மரியாதை செலுத்தப்பட்டது.

*புதுச்சேரி-மழை*

புதுச்சேரியில் நேற்று முதல் விட்டுவிட்டு பெய்து வரும் கனமழையால் தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் மழை நீர் தேங்கி உள்ளது. தேங்கிய மழை நீரை வெளியேற்ற அரசு சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் கூடுதல் தகவல்கள்.

(வாய்ஸ்-கந்தன்)

*மழை எச்சரிக்கை*

காரைக்காலில் உள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் அலுவலகம் வெளியிட்டுள்ள காரைக்கால் மீனவர்களுக்கான வானிலை எச்சரிக்கையில் தென்கிழக்கு வங்க கடல் பகுதியில் அடுத்த 24 மணி நேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில் இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக காரைக்கால் மாவட்டத்தில் உள்ள மீன்பிடி விசைப்படகு மற்றும் நாட்டுப் படகு மீனவர்கள் இன்று முதல் மறு அறிவிப்பு வரும் வரை மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மீனவர்கள் எவரேனும் படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்தால் அவர்கள் உடனடியாக கரை திரும்ப

வேண்டும் என்றும் துணை இயக்குநர் அலுவலகம் கேட்டுக் கொண்டுள்ளது.

*வானிலை*

தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நாளை பிற்பகல் வாக்கில் தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் வட தமிழகம் புதுச்சேரி மற்றும் தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும் இது அதற்கடுத்த 24 மணி நேரத்தில் வடமேற்கு திசையில் நகர்ந்து வட தமிழகம், புதுச்சேரி தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளை நோக்கி நகர்ந்து மேலும் வலுவடையக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக வரும் 25-ஆம் தேதி வரை தமிழகத்தின் பெரும்பாலான இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, அடுத்த 2 நாட்களுக்கு தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டிணம். மயிலாடுதுறை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் ஒரு சில இடங்களில் கனமுதல் மிக கனமழையும் ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பாதுகாப்பு தளவாட ஏற்றுமதியில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக மாற்றுவதே தனது அரசின் இலக்கு என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

காவல் துறையினரின் உறுதியான அர்ப்பணிப்பு நாட்டையும், மக்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நடைபெற்ற காவலர் வீர வணக்க நாள் நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி காவலர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

வானிலை காரணமாக காரைக்கால் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் இன்று முதல் மறு அறிவிப்பு வரும் வரை மீன்பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் என அரசு அறிவுறுத்தி உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin.Tamil/18.10 hrs/21.10.2025/Script/

------------------------